# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, வான்கலமோட்டு (திருத்தம்) சட்டம்

*[1987, ஏப்பிறல் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1987, ஏப்பிறல் மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

**1987 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, வான்கலமேட்டு (திருத்தம்) சட்டம்**

[1987 ஏப்பிறல் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 50/83
1786

**வான்கலமோட்டும் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப்பெயர்.**

1. இச்சட்டம், 1987 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, வான்கல மோட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**365 ஆம் அத்தியாத்தின் 21அ என்னும் பிரிவைத் திருத்துதல்.**

2. வான்கலமோட்டுச் சட்டத்தின் 1982 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வான்கலமோட்டுச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டதான 21அ என்னும் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (17) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

'(17அ) (அ) எந்த ஆளுக்கு இந்த உட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆளொருவர், முகவரின் பணியாட்டொகுதியில் பதவியொன்றிற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய முகவரை நியமிக்கின்றதான கட்டளைத் தேதிக்குப் பிந்தாததானதொரு தேதியிலிருந்து நியமிக்கப்பட்டும், இயைபான சேவைக் காலப்பகுதிக்குக் குறையாததான காலப்பகுதியொன்றிற்கு அத்தகைய பதவியில் சேவையாற்றியிருக்குமிடத்து, அத்தகைய பதவியானது, ஓய்வூதியம்பற்றிய குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரியது என வெளிப்படுத்தப்பட்ட பகிரங்க சேவையிலுள்ள பதவியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன் முகவரின்கீழ், இயைபான சேவைக் காலப்பகுதிக்கான அத்தகைய ஆளின் சேவையானது, இக்குறிப்புகளின் நோக்கங்களுக்காக அரசாங்கத்தின்கீழான சேவையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஆ) எந்த ஆளுக்கு இவ்வுட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆளொருவர், இயைபான சேவைக்காலப்பகுதி முடிவில், பதவி ஒழிக்கப்பட்டது என்ற ஏதுவின்மீது பகிரங்க சேவையினின்று ஓய்வுபெற்றிருப்பாராயின், அவருக்கு வழங்கப்பட்டிருக்கக் கூடிய ஓய்வூதியத்திற்குச் சமமான அத்தகைய தொகையினதானவோர் ஓய்வூதிய அளிப்புக்கு இயைபான சேவைக்காலப் பகுதியின் முடிவில் தகவுடையவராதல் வேண்டும்.

2—ஏ 095391—2,815 (02/87)

(இ) "எந்த ஆளுக்கு இவ்வுட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆளொருவர்" என்பது—

(i) மூகவரின் பணியாட்டொகுதியில் பதவியொன்றிற்கான ஆளொருவரது நியமனத்திற்கு நேர்முந்தி பகிரங்க சேவையில் பத்து ஆண்டுகளுக்குக் குறைந்ததும், எட்டு ஆண்டுகளுக்குக் குறையாததுமான ஓய்வூதியத்திற்குரிய சேவையுடன், சிவில் வான் செலவுத் திணைக்களத்தின் ஊழியத்தில் பகிரங்க சேவையாளரொருவராக இருப்பதோடு அத்திணைக்களத்திலுள்ள, அவரது பதவி 16 ஆம் உட்பிரிவின்கீழ் ஒழிக்கப்பட்டிருப்பின், அத்தகைய ஆள்; அல்லது

(ii) மூகவரின் பணியாட்டொகுதியில் பதவியொன்றிற்கான ஆளொருவரது நியமனத்திற்கு நேர்முந்தி, அவர் 1979 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விமான நிலைய அதிகாரசபைச் சட்டத்தின் 31 (2) (அ) என்னும் பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட விருப்புரிமையை அவர் பிரயோகித்தமை காரணமாக அச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கை விமானநிலைய அதிகாரசபையின் தொழிலில் ஊழியராகவிருந்து, அத்துடன் பகிரங்க சேவையில் பத்து ஆண்டுகளுக்குக் குறைந்ததும் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாததுமான ஓய்வூதியம் பெறற்பாலதான சேவையைக் கொண்டவரும் அல்லது கொண்டிருப்பதாகக் கருதப்படுபவருமான ஆள்,

என்று பொருள்படும்.

எந்த ஆளுக்கு இவ்வுட்பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆள் தொடர்பில் "இயைபான சேவைக்காலப்பகுதி" என்பது மூகவரின் பணியாட்டொகுதியிலுள்ள பதவியொன்றிற்கு ஆளொருவர் நியமிக்கப்பட்ட தேதிக்குப் பகிரங்கசேவையில் அவர் தொடர்ந்திருப்பாராயின் அச்சேவையில் ஓய்வூதியம் பெறற்பாலதான பத்தாண்டுச் சேவையைப் பூர்த்திசெய்வதற்கு பகிரங்க சேவையில் அத்தகைய ஆள் சேவையாற்றியிருக்க வேண்டியதான காலப்பகுதி என்று பொருள்படும்.';

(2) அந்தப் பிரிவில் (19) ஆம் உட்பிரிவின், (அ) என்னும் பந்தியிலுள்ள "(16) ஆம், (17) ஆம் பந்திகள் ஏற்புடைத்தாகின்றவரான பகிரங்க அலுவலர் ஒருவர் தவிர்ந்த எவரேனும் பகிரங்க அலுவலர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "எவரேனும் பகிரங்க அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.